DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 200/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : வடிவேல் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 29.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 29th January 2026.

**எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது நாகர்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் ராணுவத்தில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் தற்போது மின்சார வாரியத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. நான் சின்னகோவிலான்குளம் கேப் இன்பிராஸ்டக்சர் என்ற காற்றாடி கம்பெனியில் சூப்பர்வைசராக 2012ம் வருடம் வேலை செய்தேன். அங்கு கட்டுமான தளத்தில் இருந்த கட்டுக்கம்பிகள் சம்பந்தமாக கம்பெனியிலிருந்து போலீசாரிடம் புகார் கொடுக்க சொன்னதன்பேரில் நான் சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். திருடுபோன கம்பிகளின் மதிப்பு சுமார் 25000 ரூபாய் இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகார் மனுதான் நான் கொடுத்த புகார் மனு. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். போலீசார் திருடுபோன கம்பியை கண்டுபிடித்துக்கொடுத்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் கம்பெனியை விட்டு சென்றுவிட்டேன்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில் கம்பி திருடியவர்களை கண்டுபிடித்துவிட்டார்கள் என்றும், அவர்கள் ஆஜர் எதிரிகள் தான் என்று தெரிந்துகொண்டேன் என்றும், நானும், என்னுடன் வேலை செய்த சந்திரசேகரன் என்பவரும் காவல்நிலையம் சென்றோம் என்றும், அப்போது போலீசார் மதியம் 12 மணியளவில் எங்கள் முன்னிலையில் எதிரிகள் இருவரையும் விசாரித்தார்கள் என்றும், அப்போது எதிரிகள் இருவரும் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் கம்பெனியில் உள்ள கம்பிகளை டாடா ஏஸ் வாகனத்தின் மூலம் திருடியதாக எதிரிகள் ஒப்புக்கொண்டார்கள் என்றும், எங்கள் முன்னிலையில் டாடா ஏஸ் வாகனத்தையும், கம்பிகளையும் போலீசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமுலம் மற்றும் அத்தாட்சியில் நாங்கள் கையொப்பம் செய்தோம் என்றும் கூறிவிட்டு, தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிக்க எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 200/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : ஐவராஜா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 29.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 29th January 2026.

**எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது பட்டாடைக்கட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். 10 ஆண்டுகளுக்கு முன்பு நான் காவல்நிலையம் சென்றபோது போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதில் எழுதியிருந்த விபரம் எனக்கு தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில் 21.07.2012 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு நானும், வேலாயுதபுரத்தை சேர்ந்த மாரியப்பன் என்பவரும் எங்கள் ஊர் அருகே காற்றாலை கம்பெனி அருகே நின்றபோது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நானும், மாரியப்பன் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**